திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் கோவை மாவட்டம் முழுவதும் அல்லது எத்தனை மாவட்டங்கள் இதனால் பயன் பெறும் அது மட்டுமல்லாமல் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையும் இந்தத் திட்டத்தின் மூலம் நிறைவேறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிந்தவுடனேயே எல்லாத் திட்டங்களும் நிறைவேற்றப்படும்.

‘மால்கோ’ நிறுவனத்திடம் உள்ள மின்கட்டண நிலுவை.

*கு.கா.வி. எண். 28—திரு. உ. சுப்பிரமணியன், திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அலுமினியம் உற்பத்தி செய்யும் ‘மால்கோ’ ஸ்தாபனம் கட்ட வேண்டிய மின்சார கட்டண பாக்கி சுமார் ஒன்பது கோடி ரூபாய் வசூலாகாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மேல் நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) மின் கட்டண நிலுவைகளைச் செலுத்தாவிட்டால் மின் இணைப்பு துண்டிக்கப்படுமென ‘மால்கோ’ நிறுவனம், 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் எச்சரிக்கப்பட்டது. ஆனால் மின் வாரியம் மின் இணைப்பை துண்டிக்க முடியாதபடி உயர்நீதிமன்றத்தின் மூலம் கம்பெனி 14–9–1977 அன்று தடை உத்திரவு வாங்கியுள்ளது. வழக்கு நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே 9 கோடி ரூபாய் வசூலாகாமல் பாக்கியுள்ளது. இந்தக் கேள்வி பத்திரிகைச் செய்தியின் அடிப்படையிலே கேட்கப்பட்ட கேள்வி. தற்போது மொத்த பாக்கி எவ்வளவு இந்த நிறுவனம் அரசு மின்சாரத் துறைக்கு தரவேண்டும், எத்தனை ஆண்டுகளாக இந்த பாக்கி இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ? இப்படி கோர்ட்டுக்குச் சென்று தடை வாங்கினால் எப்போது முடிவு காண்பது ?

1980 ஜுலை 19]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மால்கோவைப் பொறுத்தவரையில் பாக்கியின் விவரங்களைத் தருகிறேன் :

மின் கட்டண பாக்கி	ரூ. 98.15 லட்சம்.
சர்சார்ஜ்	ரூ. 16.35 லட்சம்.
தனி சர்சார்ஜ்	ரூ. 38.48 லட்சம்.
மின் துய்ப்பு வரி	ரூ. 21.89 லட்சம்.
அபராத தீர்வை	ரூ. 718.90 லட்சம்.
காலந்தாழ்த்தி மின் கட்டணம் செலுத்துவதற்கென அபராத கட்டணம்.	ரூ. 8.73 லட்சம்.

ஆக 902.50 லட்சம் அதாவது 9 கோடியே 2 லட்சத்து 50 ஆயிரம்.

ஆண்டு வாரியாக நிலுவையின் விவரம் பின்வருமாறு :—

1973-74ஆம் ஆண்டு	ரூ. 7.00 லட்சம்.
1974-75ஆம் ஆண்டு	ரூ. 721.64 லட்சம்.
1975-76ஆம் ஆண்டு	ரூ. 39.33 லட்சம்.
1976-77ஆம் ஆண்டு	ரூ. 134.53 லட்சம்.

ஆகவே இந்த நிலுவை 1973—74 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இருந்து வருகிறது. இதிலே விரைவிலே முடிவு காணவேண்டுமென்று அரசு கருதுகிறது. இதை அரசு உணருகிறதா என்று கேட்டார்கள். இதை அரசு உணருகிறது. ஆனால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிறுவனம் 1973 ஆம் ஆண்டிலிருந்து மின்கட்டண நிலுவை தரவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குமுன் ஒழுங்காக செலுத்தி இருக்கிறார்கள். இதற்குப் பின்னால் கட்டாமல் போனதற்கு என்ன காரணம்? இப்போதுகூட மாநில அரசாங்கம் சொன்னதை மத்திய அரசாங்கம் ஏற்றுக்

கொண்டு கேரளாவிற்கு அலுமினியம் கொடுத்து மின்சாரம் பெறுவதை—இந்த நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறது. இனிமேலாவது பாக்கியை வசூல் செய்ய இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு காலம் தாழ்த்தியாவது நியாயத்தை உணர்ந்ததற்காக நாம் உண்மையிலேயே பாராட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கு முன்பு ஒழுங்காகச் செலுத்தி இருக்கிறார்கள். இப்போதும் ஒழுங்காகச் செலுத்துகிறார்கள். 1974-75 ஆம் ஆண்டு மின்வெட்டு அமுலில் இருந்தது. அவர்களுக்கென்று ஒரு கோட்டா நிர்ணயித்திருக்கிறார்கள். இந்த கோட்டாவிற்கு அதிகமாக அவர்கள் மின்சாரம் பயன்படுத்தியுள்ளார்கள். அதன் விளைவாக, அதற்கெல்லாம் அபராத கட்டணம் விதிக்கப்பட்டது. அதிலே இந்த 9 கோடி ரூபாய் வருகிறது. எப்படி அனுமதிக்கப்பட்டது என்ற விவரம் இல்லை.

திரு. செ. சிவசாமி : 1973-74 ஆம் ஆண்டில் இந்த பாக்கி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒன்பது கோடி ரூபாய் பாக்கி வைத்திருக்கக்கூடிய நிலையில் மிகப் பெரிய ஸ்தாபனம் இன்றைக்கு கோர்ட்டுகள் மூலம் தப்பித்துக் கொள்ள சந்தர்ப்பம் இருக்கிறது. ஆனால் சாதாரண ஏழை மக்கள் பத்து ரூபாய், ஐந்து ரூபாய் கட்டவில்லை என்றாலே சாமான்களை ஜப்தி செய்யக்கூடிய நிலை இருக்கிறது. அவர்கள் கோர்ட்டுக்குப் போக முடியாது. இந்தமாதிரி ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் இடையே பாரபட்சம் இருக்கும் நிலைமையை மாற்றி சட்டத்தைத் திருத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எந்தச் சட்டம் வந்தாலும் அந்தச் சட்டத்தின் மூலம் கோர்ட்டுக்குச் செல்ல வழி உண்டு. மின் சப்ளையைத் துண்டிக்க வேண்டுமென்று மின் வாரியத்திலிருந்து சொன்னோம். மின் வாரியம் எச்சரிக்கை நோட்டீஸ் கொடுத்தது. முதலில் வார்னிங் நோட்டீஸ் கொடுத்துத்தான் துண்டிக்க வேண்டும். அதைக் கொண்டு போய் கோர்ட்டில் கொடுத்து ஸ்டே வாங்கி விட்டார்கள்.

திரு. ரா. உமாநாத் : கோர்ட்டில் ஸ்டே பண்ணியிருப்பது மின்சார சப்ளை கனெக்ஷன் கட் சம்பந்தமானநடவடிக்கைதான். நான் கேட்டுக்கொள்வது அவர்கள் கொடுக்க வேண்டிய பாக்கி 9 கோடி ரூபாய்க்கு மேல் இருப்பதால் ஏன் அவர்களுடைய பொருள்களை ஜப்தி செய்திருக்கக் கூடாது ? அதிலே தகராறு இருக்கிறது என்றால் அந்த பாக்டரி முழுவதையும் ஏன் 'டேக் ஓவர்' செய்யக்கூடாது ?

1980 ஜூலை 19]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதை 'டேக் ஓவர் பண்ண வேண்டுமென்று ஏற்கெனவே இருந்த அரசு ஒரு சட்டத்தைத் தயாரித்து அனுப்பி அனுமதி கிடைக்கவில்லை. ஏனென்றால் அந்த நிறுவனத்தில் அந்நிய நாட்டு மூலதனம் இருக்கிறது. 'டேக் ஓவர்' பண்ணுவது என்பது பிரச்னை அல்ல. இந்த நிறுவனம் அப்போது மின்சாரத்தைக் கூடுதலாகப் பெற்றிருக்கிறது. அவர்கள் சொல்வது—இது அரசாங்கத்திற்குத் தெரிந்து நாங்கள் கூடுதலாகப் பெற்றிருக்கிறோம். அதற்காக கண்டக்டர் உற்பத்தி பண்ணிக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அரசாங்கத்திலும், மின் வாரியத்திலும் அது பற்றிய எந்தக்குறிப்பும் காணப்படவில்லை; அனுமதியும் காணப்படவில்லை.

திரு. துரை முருகன் : இந்தப் பிரச்சினை பற்றி ஏற்கெனவே ஒரு முறை இந்த மாமன்றத்தில் வாதிக்கப்பட்டபோது அந்தக் கம்பெனி கோர்ட்டுக்கு போய் பார்ஷியல் ஸ்டே வாங்கச் சென்றபோது அட்வகேட்-ஜெனரல் வாதிடவில்லை, அப்சல்யூட் ஸ்டே அப்ளை செய்கிறபோது அட்வகேட்-ஜெனரல் கோர்ட்டுக்கே போகவில்லை என்று சொல்லி, அது மாபெரும் குற்றம், அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோர்ட்டில் என்னென்ன நடந்தது என்பதைப் பற்றியெல்லாம் இங்கே சொல்லக் கூடாது. அட்வகேட்-ஜெனரல் வாதிட்டார், வாதிடவில்லை என்றெல்லாம் இந்தக் கேள்வியிலே சொல்லிக் கொண்டிருப்பது சரியல்ல. கேள்வி 'மால்கோ' வைப் பற்றியது.

திரு. துரை முருகன் : ஏற்கெனவே அவையில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்குமானால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று திரு. லத்தீப் அவர்கள் கூடக் கேட்டார்கள். அட்வகேட்-ஜெனரலை அவையில் கூப்பிட்டு கேட்கலாம் என்றும் சொல்லப்பட்டது. அந்த அட்வகேட்-ஜெனரல் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது. அதுவும் சபையில் இல்லாதவரைப் பற்றிய குற்றச்சாட்டு நிச்சயமாகக் கூடாது.

திரு. துரை முருகன் : யார் மீதும் குற்றம் சொல்லவில்லை. அப்சல்யூட் ஸ்டே கோரி அவர்கள் கோர்ட்டுக்கு வந்தபோது சர்க்கார் தரப்பில் வாதிட்டிருக்க வேண்டியவர் வாதிடவில்லை. அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் மூலக் கேள்வியை படித்துப் பார்க்க வேண்டும்.

திரு. மி. வின்சென்ட் : அலுமினியப் பங்கீடு கொடுத்து மின்சாரம் பெறும் கேரளா தமிழ்நாடு ஒப்பந்தம் வெற்றிகரமாக அமைந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 11—7—1980 அன்று அனுப்பிய கடிதத்தின்படி கேரள அரசு தமிழக அரசு மால்கோ சம்பந்தமாக அலுமினியப் பங்கீடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் அந்த ஒப்பந்தம் மூன்றாண்டுகளுக்குச் செய்யப்பட்டது. மத்திய அரசு ஒத்துக் கொண்டது இந்த ஆண்டுக்கு மட்டுந்தான். இதிலே இரண்டு வருஷம் இன்னும் பாக்கியிருக்கிறது.

திரு. வேட்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மால்கோ நிறுவனம் 1973 ஆம் ஆண்டில் இருந்து மின்சார கட்டணப் பாக்கி வைத்திருப்பதாகச் சொன்னார்கள். 1977 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? 1973-74, 1974-75 ஆம் ஆண்டுகளில் அதை வசூலிக்க நடவடிக்கை அப்போது இருந்த அரசால் எடுக்கப்பட்டதா ?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படி எடுத்திருந்தால் இந்தப் பிரச்சினையே எழுந்திருக்காது.

ஆற்காடு நகரில் துணை நீதிமன்றங்கள்.

*கு. கா, வி. எண் 29—திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஆற்காடு நகரில் துணை நீதிமன்றங்கள் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படுத்தப் படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) & (ஆ) இல்லை.